செ.வெ.எண்.48 நாள்: 30.04.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 2019-தமிழ்நாடு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை முன் ஏற்பாடுகளை தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 2019-தமிழ்நாடு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை முன் ஏற்பாடு தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று (30.04.2019) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் 2019ம் ஆண்டு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை தமிழகத்தின் மொத்தம் 42 மையங்களில் நடைபெறுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் மட்டுமே மாணவர் சேர்க்கை மையமாக செயல்பட உள்ளது. இந்த மையத்தில் மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் வருகை தருவார்கள். அவர்களுக்கு குடிநீர் வசதி மற்றும் வளாகத்தை தூய்மையாக பராமரிக்க மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு பயன்பெறும் வகையில் சக்கர நாற்காலி வைக்கப்படும். மேலும் தடையில்லா மின்சாரம், மாணவ, மாணவிகள் அதிக அளவில் வருகை தருவதால் வளாகத்தில் தேவையான காவல் துறையினரின் மூலம் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்திட வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் மாணவ, மாணவிகளுக்கு பந்தல் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில் தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திருமதி.விக்னேஸ்வரி அவர்கள் தெரிவித்ததாவது:

2019ம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் ஆன்லைன் மூலமாக மே 2 முதல் மே 31 வரை பதிவு செய்யலாம். அதனை மாணவர்கள் தாங்களே இணையதளம் மூலமாகவும் செய்யலாம் அல்லது தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள சேவை மையம் வழியாகவும் பதிவு செய்யலாம் மற்றும் இணையதள கலந்தாய்விலும் பங்கேற்கலாம் எனவும், மேலும் பொறியியற் சேர்க்கைக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மையமாகவும், தூத்துக்குடி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி செயல்படும் எனவும் தெரிவித்தார். அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00மணி முதல் மாலை 5.30 மணி பதிவு செய்யலாம் சான்றிதழ் சரிபார்ப்பு பணிக்கு மாணவருடன் 1 நபர் மட்டுமே உள்ளே வர அனுமதிக்கப்படுவார்.

மாணவர்கள் விண்ணப்பம் பதிவு செய்வதற்கு கீழ்கண்ட விவரங்களுடன் வரவேண்டும்.

NAME OF THE CANDIDDATE (விண்ணப்பதாரரின் பெயர்), E_MAIL ID (மின்னஞ்சல் முகவரி) MOBILE PHONE NUMBER: (அலைபேசி எண்), COMMUNITY- CASTE DETAILS (வகுப்பு/சாதி தகவல்கள்) ST/SCA/SC/MBC/BCM/ BC/ OTHERS, SPECIAL RESERVATION REQUESTED (சிறப்பு இடஒதுக்கீடுகள் வேண்டுதல்), SONS/DAUGHTERS OF EX-SERVICEMEN (முன்னாள் இராணுவ வீரர் மகன்/மகள்), DIFFERENTLY ABLED PERSON (மாற்றுதிறனாளிகள்), EMINENT SPROTS PERSONS (விளையாட்டு வீரர்கள்), DETAILS OF REGISTRATION FEE TO BE PAID THROUGH INTERNET

(பதிவுக் கட்டணம் இணையதளம் மூலமாக செலுத்துவதற்கான விவரம்), CREDIT CARD / DEEBIT CARD / NET BANKING DETAILS, (கடன் அட்டை/பற்று அட்டை/ இணையத்தின் வழி கட்டணம் செலுத்தும் விவரங்கள்), DEMAND DRAFT IS PERMITTED ONLY AT TFC, (வரைவு காசோலையை TFC வாயிலாக மட்டும் செலுத்தலாம்), AADHAR NUMBER-OPTIONAL (ஆதார் எண்-விருப்பம் இருப்பின்), PARENT'S ANNUAL INCOME DETAILS (பெற்றோரின் ஆண்டு வருமான விவரம்), SCHOOL DETAILS OF VIII. IX X XI XII Std (பள்ளி தகவல்கள் - வகுப்பு 8 முதல் 12 வரை), XII EXAMINATION REGISTRATION NUMBER (12ம் வகுப்பு தேர்வு பதிவெண்), XII STD MARKS SHEET (12ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்), SCHOLARSHIP REQUESTED (உதவித்தொகை தேவைப்பட்டால்), FIRST GRADUATION FEE CONCESSION (SC/SCA or SC/SCACONVERTED CHRISTIAN CONVERTED CHRISTIAN (உயர்கல்வி உதவித்தொகை), AICTE TUITION FEE WAIVER (AICTE கல்விக் கட்டண விலக்கு), USE THE DATA SHEET FOR APPLICATION REGISTRATION (விண்ணப்பம் பதிவு செய்ய தரவுத் தாளை பயன்படுத்தவும்),

பதிவுக் கட்டணம் : பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர் DEBIT CARD/CREDIT CARD/ NET BANKING இணையதள வாயிலாக செலுத்தலாம். இணையதள வாயிலாக பதிவுக்க கட்டணத்தை செலுத்த இயலாத மாணாக்கர்கள் THE SECRETARY, TNEA" payable at CHENNAI என்ற பெயரில் 01.05.2019ற்கு பிறகு பெற்ற வரைவோலையை பதிவுக் கட்டணமாக தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை சேவை (TFCs) மையமான இக்கல்லூரி வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.